කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව

வளிமண்டலவியல் திணைக்களம்

DEPARTMENT OF METEOROLOGY

2020

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த சாத்திய அறிக்கை

Annual Performance Report

செயல்திறன் அறிக்கை
2020

வளிமண்டலவியல் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம் - 304

2020 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - வளிமண்டலவியல் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம் - 304

உள்ளடக்கங்கள்

பிரிவு 01 – நிறுவனத்தைப் பற்றி:.....04

பிரிவு 02 – முன்னேற்றமும் நோக்கும.....12

பிரிவு 03 –2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ருடத்திற்கான நிதிச் செயற்பாடுகள்.....19

பிரிவு 04 – செயற்பாட்டு குறிகாட்டிகள.....24

பிரிவு 05 - செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க).....25

பிரிவு 06 – மனித வள அபிவிருத்தி.....31

பிரிவு 07 – அனுசரித்துப் (இணங்கிப்) போதல் தொடர்பான அறிக்கை.....33

இணைப்பு 01.....45

பிரிவு 01 – நிறுவனத்தைப் பற்றி:

1.1 அறிமுகம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஆரம்பத்தை எடுத்துப் பாரத்தால், அது 19ம் நூற்றாண்டிலிருந்தான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இலங்கையில் வளிமண்டலவியல் பரமாணங்களின் முறையான அவதானிப்பானது 1867 ஆம் ஆண்டில் நில அளவைத் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1909 ஆம் ஆண்டில் கொழும்பு அவதானிப்பகம் என்ற பெயரிலான வேறான ஒரு நிறுவனம் தற்போது வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்திருக்கும் வளாகத்தில் தாபிக்கப்பட்டது. கொழும்பு அவதானிப்பகமானது வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளை வழங்குவதைப் பிரதான நோக்கமாகக் கொண்ட ஒரு சுயாதீனமான அரச திணைக்களமாக 1948 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. தற்போது, வளிமண்டலவியல் திணைக்களமானது வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியலுடன் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் சட்டபூர்வமான அமைப்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள்

நோக்கு

வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளுடன் தொடர்பான தனிச்சிறப்பான நிலையமாக உருவெடுத்தல்

பணிக்கூற்று

பொதுத்துறை மற்றும் தனியார் துறையிலுள்ள நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வளிமண்டலவியல், வான்சார் வானிலையியல், கடல்சார் வானிலையியல், நீரியல் வானிலையியல், விவசாய வானிலையியல் மற்றும் காலநிலையியல் தொடர்பான சேவைகளையும் வரையறுக்கப்பட்ட அளவிலான வானியல் சேவைகளையும் தேசிய நலன்களுடனும் சர்வதேச நியமங்களுடனும் இசைந்த வகையில் வழங்குதல்.


இலக்குகள்

- பல்வேறு புலங்களின் மீதான தாக்கத்தின் அடிப்படையில் அதிக துல்லியமான நேரம் மற்றும் இடங்களுடன் கூடிய வளிமண்டலவியல் எச்சரிக்கைகளையும் எதிர்வுகூறல்களையும் வழங்குதல்.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வேறான பருவகால எதிர்வுகூறல்களும் அவ்வாறான எதிர்வுகூறல்களின் முறையான இற்றைப்படுத்தலும்
- அரசாங்கத்தின் நீண்டகால அபிவிருத்தி நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் நோக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முறையான திட்டமிடலுக்கு அவசியமான காலநிலையியல் எதிர்வுகூறல்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல்
- சர்வதேச நியமங்களுக்கேற்ற வகையில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல்

1.3 பிரதான பணிகள்

- பொதுமக்களுக்கும் விவசாயம், சக்தி, மீன்பிடி, கப்பற்றுறை, காப்புறுதி மற்றும் ஏனைய ஆர்வமுள்ள துறையினருக்கும் வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளை வழங்குதல்
- மோசமான வானிலை (சூறாவளி, பலத்த மழைவீழ்ச்சி, மின்னல் தாக்கங்கள், கடும் காற்று போன்றவை அடங்கலாக) மற்றும் சுனாமி குறித்த எச்சரிக்கைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்
- வான்வழி வானிலையியல் சேவைகளை வழங்குதல்
- காலநிலையியல் தரவுத்தளங்களைப் பேணுதல்
- தேசிய அபிவிருத்தி மற்றும் ஆய்வுத் தேவைகளுக்காக வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளையும் தரவுகளையும் வழங்குதல்
- வளிமண்டலவியல், காலநிலையியல் மற்றும் காலநிலை மாற்றங்கள் மற்றும் இணைந்த பாட விடயங்களில் கல்வியையும் ஆய்வுகளையும் ஊக்கப்படுத்தல்
- வானிலை, காலநிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் ஆகிய கருப்பொருட்களில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தலும்
- பாடசாலை மாணவர்கள், கொள்கை மற்றும் தீர்மான வகுப்பாளர்கள் உட்பட ஆர்வமுள்ள பிரிவினருக்கான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்கு செய்தலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தலும்
- கண்காட்சிகளில் காட்சிப்பொருட்கள் மற்றும் வளவாளர்கள் மூலம் பங்களிப்புச் செய்தல்
- கோரிக்கைகளுக்கிணங்க விசேடமான வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளை வழங்குதல்
- வரையறுக்கப்பட்ட அளவிலான வானியல் (சூரியன், சந்திரன், கோள்கள் மற்றும் அலை சார்ந்த) சேவைகளையும் புவிக்காந்தவியல் சேவைகளையும் வழங்குதல்

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகளின் கீழ் அமைந்த பிராந்திய அலுவலகங்கள்

1.5.1 திணைக்களத்தின் கீழுள்ள பிரதான பிரிவுகள்

தொடர் இல.	பிரதான பிரிவு	உப பிரிவு	பொறுப்புகள்
01	அவதானிப்பு வலையமைப்புகளும் உபகரணங்களும்	உபகரணப் பிரிவு	பாரம்பரிய வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும் பராமரிப்பும், தன்னியக்க வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும் பராமரிப்பும், வெளியக பிரிவினரின் கோரிக்கைக்கிணங்க அவர்களின் வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும் பராமரிப்பும் மற்றும் கண்காட்சிகளில் மரவேலை மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் உதவி புரிதல்
		மின்னியல் மற்றும் இலத்திரனியல் பராமரிப்புப் பிரிவு	மின்னியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தமும் பராமரிப்பும், தன்னியக்க வானிலைத் தொகுதி மற்றும் செய்மதித் தரவு பெற்றுக்கொள்ளும் தொகுதியின் பராமரிப்பு
		ரேடார் ∴ ரேடியோ சொன்ட் பிரிவு	மேல் வளிமண்டல அவதானிப்புகள், அத் தரவுகளைப் பேணிப் பாதுகாத்தல், திணைக்களத்திற்கு விஜயம் செய்வோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
		பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள்	ஓவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை நிலப்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகளை மேற்கொள்வதுடன், தொடர்ச்சியான வானிலைக் கண்காணிப்பு. 3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை

			மேல் வளிமண்டல அவதானிப்புகள் (மேல் வளிமண்டல நிலையங்கள்)
02	தரவு செயன்முறைப் படுத்தலும் காப்பும்	தரவுப் பிரிவு	தரக் கட்டுப்பாடு, தன்னியக்கப் பதிவு வளிமண்டலவியல் உபகரணங்கள் மூலமான தரவுகளை செயன்முறைப் படுத்தலும் காப்பும்
		காலநிலைப் பிரிவு	பிராந்திய நிலையங்களின் ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும், வளிமண்டலவியல் தரவுகளின் தரக் கட்டுப்பாடும் காப்பும்
		நீரியல் வானிலையியல் பிரிவு	அனைத்து மழைவீழ்ச்சி நிலையங்களின் ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும், புதிய மழைவீழ்ச்சி நிலையங்களைத் தாபித்தல், மழைவீழ்ச்சியை அளவிடுவதற்கான தன்னார்வ அவதானிப்பாளர்களைப் பயிற்றுவித்தல், தரக்கட்டுப்பாடும் பேணிக் காத்தலும் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பும்
		விவசாய வானிலையியல் பிரிவு	விவசாய வானிலையியல் வலையமைப்பின் ஒருங்கிணைப்பு, விவசாய வானிலையியல் தரவுகளின் தரக்கட்டுப்பாடும் பேணிக் காப்பும்
		கணினிப் பிரிவு	கணினி வடிவில் வளிமண்டலவியல் தரவுகளின் தரக்கட்டுப்பாடும் காப்பும், காலநிலைத் தரவுத்தளத்தைப் பேணுதல், வெளியகப் பிரிவினருக்கு வளிமண்டலவியல் தரவுகளை வழங்குதல், திணைக்களத்தின் இணையத்தளத்தைப் பேணுதலும் அதை நவீனமயப்படுத்தலும்.
		நூலகம்	நூலகத்தைப் பராமரித்தல்
		பதிவு அறை	காகித அடிப்படையிலான தரவுகளினதும் தகவல்களினதும் பதிவுகளைப் பேணிப் பாதுகாத்தல்
03.	எதிர்வுகூறல் மற்றும் தீர்மானத்திற்கான ஆதரவு	தேசிய வளிமண்டலவியல் மற்றும்	வளிமண்டலவியல் தரவுகளை செயன்முறைப்படுத்தலும் ஆய்வுசெய்தலும், வானிலை

		முன்னெச்சரிக்கை நிலையம்	முன்னறிவிப்பும் அதைப் பரப்புதலும், தேசிய சுனாமி மற்றும் வானிலை இடர்களுக்கான முன்னெச்சரிக்கை நிலையமாகச் செயற்படுதல்
		தொடர்பாடல் பிரிவு	வளிமண்டலவியல் தரவுகள் ∴ அவதானிப்புகளைப் பரிமாறிக் கொள்ளுதல், வானிலை முன்னறிவிப்புகளையும் முன்னெச்சரிக்கைகளையும் பரப்புதல்
		விமானநிலைய வளிமண்டலவியல் நிலையங்கள்	சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனத்தினதும் (ஐஊயுழு) உலக வளிமண்டலவியல் நிறுவனத்தினதும் (றுஆழு) நியமங்களுக்கும் விதிமுறைகளுக்குமிணங்க வளிமண்டலவியல் தரவுகள் ∴ தகவல்களை வழங்குதல்
04.	ஆய்வு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி	ஆய்வுப் பிரிவு	வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் ஆய்வுகளை மேற்கொள்ளல்
		பயிற்சிப் பிரிவு	பயிற்சி வழங்குதலும் திணைக்களப் பரீட்சைகளை நடாத்துதலும்.
		காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையம்	காலநிலை மாற்றங்களுடன் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்
05.	நிர்வாகம் மற்றும் நிதி	தாபனப் பிரிவு	தாபனத்துடன் தொடர்பான ஊழியர்களின் செயற்பாடுகள்
		நிதிப் பிரிவு	நிதி தொடர்பான செயற்பாடுகள்
		கொள்வனவுப் பிரிவு	கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கல்
		விசேட கொள்வனவுப் பிரிவு	வெளிநாட்டுக் கொள்வனவு தொடர்பான செயற்பாடுகள்
		போக்குவரத்துப் பிரிவு	வாகனங்களைப் பராமரித்தலும் போக்குவரத்து தொடர்பான செயற்பாடுகளும்
		நிர்மாணப் பிரிவு	திணைக்களத்தின் கட்டட நிர்மாணம் தொடர்பான தேவைகளை ஒருங்கிணைத்தலும் கட்டடங்களைப் பராமரித்தலும்

1.5.2 திணைக்களத்தின் கீழுள்ள பிராந்திய அலுவலகங்கள்

கட்டுநாயக்க, மத்தளை, இரத்மலானை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, கட்டுகஸ்தோட்டை, குருநாகல், மஹாஇலுப்பல்லகம, மன்னார், மொனராகலை, நுவரெலியா, பொலன்னறுவை, பொத்துவில், புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, காலி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு

1.6 திணைக்களத்திலுள்ள நிதி

திறைசேரியிடமிருந்து பெறப்படும் பணத்திலேயே திணைக்களம் இயங்குகின்றது. திணைக்களத்திடம் எவ்வித நிதியும் இல்லை.

1.7 வெளிநாட்டு உதவிகளுடனான செயற்றிட்டங்கள்

நன்கொடை வழங்கும் நாடு அல்லது நிறுவனம்	வெளி நாட்டு உதவி ஒப்பந்த இல.	விபரம் (நன்கொடை வழங்கப்பட்ட காரணம்)	பணம், பொருட்கள் அல்லது நேரடிக் கொடுப்பனவு	வெளிநாட்டு உதவியின் பெறுமதி		செயற்றிட்டக் காலம்
				ரூபா	வெளிநாட்டு நாணயம்	
உலக வங்கி	ளுசுஜீ (செயற்றிட்டம்)	நுஉஆறுகு தரவு அனுமதிப்பத்திரம்	குறித்த நிறுவனமான நுஉஆறுகுஇற்கு ஒரு நேரடிக் கொடுப்பனவு		யூரோ 42000.00	ஒரு வருடம்
		நோர்வே வளிமண்டலவியல் பயிற்சி நோர்வே காலநிலை (ஆநுவு ழேசறயல) பயிற்சி	இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விமானப் பயணச்சீட்டு மற்றும் தங்குமிடத்திற்கான ஒரு நேரடிக் கொடுப்பனவு		அமெ.டொலர் கூ180000.00	ஒரு வருடம்

		திணைக்கள நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு உள்ளூர் ஆலோசனை ஆதரவை வழங்குதல்	ஒரு நேரடிக் கொடுப்பனவு	800000.00		3 மாதங்கள்
ருனேீ	புஊகு-ஊசுஐறுஆீ	இணையத்தின் மூலம் கூட்டங்களை நடாத்துவதற்காக ணுழுழுஆ இற்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டது.	ஒரு நேரடிக் கொடுப்பனவு			ஒரு வருடம்
		றுநுடீ புஐளு இணையத்தளத்தையும் அலைபேசிச் செயலியையும் தாபிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.	ஒரு நேரடிக் கொடுப்பனவு			

- நுஊஆறுகு – நடுத்தர வீச்சு வானிலை எதிர்வுகூறலுக்கான ஐரோப்பிய நிலையம்
- ருனேீ – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
- னுழுஆ – வளிமண்டலவியல் திணைக்களம்
- றுழசடன டீயமெ – உலக வங்கி
- புஊகு – பசுமை காலநிலை நிதியம்
- யுறுளு – தன்னியக்க வானிலைத் தொகுதிகள்
- புஐளு – பூகோள தகவல் தொகுதி
- ஊசுஜீ- காலநிலை மீளெழல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்

பிரிவு 02 – முன்னேற்றமும் நோக்கும்

குறிப்பிடத்தக்க அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1 வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் பிரிவின் முன்னேற்றம்

1. பருவகால மற்றும் நீண்ட கால முன்னறிவிப்புகளை துல்லியமான மற்றும் பயனுள்ள முறையில் செய்வதன் மூலம் பயிர் இழப்புகளை குறைக்க முடியும்

- மூன்று மொழிகளில் மாதந்தோறும் வெளியிடப்படும் வானிலை முன்னறிவிப்புகள்.
- வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, பொலன்னறுவை, மன்னார், புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று, குறித்த முன்னறிவிப்பு குறித்து உரிய அரசு மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களுக்கு (விவசாயம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான) துல்லியமாகவும், சரியான நேரத்திலும் தெரியப்படுத்துவதன் மூலம் பயிர் மற்றும் பயிர் சேதங்களை குறைக்க முடியும். 2020 பருவத்திற்கான மழை நிலைமைகள். இது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP-CRIWMP) கீழ் நிதியுதவி செய்யப்பட்டது.
- மாவட்டங்களில் தொடர்புடைய பங்குதாரர்களுடன் வானிலை நிலவரம் குறித்து மாதாந்திர ஆன்லைன் விவாதங்களைத் தொடங்குவதன் மூலம் மிகவும் பயனுள்ள சேவை தொடங்கப்பட்டது. இதன் வெற்றியின் காரணமாக, வாரந்தோறும் வழங்குமாறு கோரப்பட்டு, இப்போது விவாதம் விரிவான சித்திர வடிவில் வாரந்தோறும் அளிக்கப்படுகிறது.
- 'அடுத்த சில நாட்களுக்கு விரிவான வானிலை முன்னறிவிப்புகளுக்கு' பருவமழை விவாதத்தின் பங்குதாரர்களின் கோரிக்கையின்படி, தினசரி அடிப்படையில் இந்த பட வடிவில் கணிப்புகள் முக்கிய பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டன. இது வரவிருக்கும் நாட்களில் வானிலை பற்றிய யோசனையை எடுக்கவும் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுக்கவும் உதவியது (பேரழிவுகளுக்கான தயாரிப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான எதிர்கால நடவடிக்கைகள்). இந்த முன்னறிவிப்புகள் தற்போது புதுப்பிக்கப்பட்டு, திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறுகின்றன.

2. பொதுமக்களுக்கும் ஆர்வமுள்ள தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ள வானிலை மற்றும் காலநிலை தகவல்களை (பகுதி-குறிப்பிட்ட மற்றும் நிகழ்நேரம்) வழங்குவதற்காக, WEB GIS இணையதளம் மற்றும் மொபைல் APP ஆகியவற்றை நிறுவும் பணி நிறைவடைந்துள்ளது.

3. நீண்ட கால தேவையாக இருந்த கணித மாதிரிகளை மேம்படுத்தவும், ஆராய்ச்சி மற்றும் வானிலை தரவு பயன்பாட்டிற்கு தேவையான கணினி அறிவை அதிகரிக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு LINUX/R குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

2.2 ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவும் காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையமும்

2020 இல் பின்வரும் துறைகளில் ஆராய்ச்சி நடத்துதல்.

- இலங்கையின் வரட்சி நிலைமைகளைக் கண்காணிப்பதை மேம்படுத்துவதற்கும், வறட்சியை முன்னறிவிப்பதற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சியைத் தொடங்குதல்.
- லேசான, மிதமான மற்றும் பலவீனமான எல் நினோ மற்றும் லா நினா நிலைமைகளின் போது இலங்கையில் மழைப்பொழிவு முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய ஆய்வு.
- இலங்கையின் மாதாந்திர மற்றும் பருவகால மழைப்பொழிவுக்கான வடக்கு அட்லாண்டிக் அலைவுகளைப் படிக்கவும்.
- உலகளாவிய காலநிலை மாதிரிகளால் வழங்கப்பட்ட காலாண்டுக்கு ஒருமுறை காணப்பட்ட மழைப்பொழிவுடன் ஒப்பிடுவதன் மூலம் இலங்கைக்கான அதன் செல்லுபடியை ஆராய்வது.
- குறுகிய மற்றும் நீண்ட தூர முன்னறிவிப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் காலநிலை சேவையை மேம்படுத்துதல்: வழக்கு ஆய்வு 2021 தென்மேற்கு பருவமழை.
- செப்டம்பர் 1, 2020 அன்று அறிவிக்கப்பட்ட குறுகிய கால கனமழை நிலைமைக்கு வழிவகுத்த வானிலை நிகழ்வுகள் பற்றிய ஆராய்ச்சி.

ஆய்வு வெளியீடுகள்

- செப்டம்பர் 1, 2020 அன்று பதிவான குறுகிய கால கனமழைக்கு காரணமான வானிலை நிகழ்வுகள் குறித்து, 'அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் அணிசேரா மற்றும் பிற வளரும் நாடுகளின் மையம் (NAM S&T மையம்)' என்ற இதழுக்கான ஆய்வுக் கட்டுரையை வழங்குதல்.
- மே 15, 2016 அன்று இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்திய ROANU சூறாவளி குறித்த பல ஆபத்து முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு பற்றிய சர்வதேச கருத்தரங்கிற்கான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு மற்றும் காலநிலை மாற்ற ஆய்வுகளுக்கான மையம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் வழக்கமான பணிகள்.

வறட்சி நிலைகளை கண்காணித்தல்

- வறட்சி நிலை கண்காணிப்பு தாள் - தரப்படுத்தப்பட்ட மழைவீழ்ச்சி குறியீட்டைப் பயன்படுத்தி வறட்சி நிலை கண்காணிப்பு மற்றும் மேப்பிங். முறையே 1, 2, 3, 4, 5, 6, 9 மற்றும் 12 மாதங்களுக்கான வறட்சி நிலைமைகளைக் கண்காணித்தல், மாதாந்திர மழைப்பொழிவுத் தரவுகளைப் பயன்படுத்தி, அந்த காலகட்டங்களுக்கான வறட்சி நிலைமைகளை வரைபடமாக்குதல்.
- இலங்கையின் வரட்சி நிலைமைகளைக் கண்காணிப்பதை மேம்படுத்துவதற்கும் வரட்சி முன்னறிவிப்பைத் தொடங்குவதற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சியைத் தொடங்குதல்.

நீண்ட கால எதிர்வுகூறலுடன் தொடர்பான செயற்பாடுகள்

- உலகளாவிய காலநிலை கட்டமைப்பு வரைபடங்கள் மற்றும் CPT, FOCUS, CLICK மென்பொருட்களைப் பயன்படுத்தி மாதாந்திர மற்றும் காலாண்டு வெப்பநிலை கணிப்புகளை உருவாக்கவும்.
- வானிலை மையங்களில் கவனிக்கப்பட்ட வானிலை தரவுகளைப் பயன்படுத்தி மாதாந்திர மழைப்பொழிவு முன்னறிவிப்புகளைச் சரிபார்க்கவும்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுவின் (IPCC) உள்ளூர் மையப் புள்ளியாக காலநிலை மாற்ற ஆய்வுகளுக்கான மையத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுவால் (IPCC) வெளியிடப்படும் பின்வரும் சிறப்பு அறிக்கைகளின் உள்ளூர் விசாரணைகளைக் கையாளுதல்.

  காலநிலை மாற்றம் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கான நிலச் சுருக்க அறிக்கையின் இறுதி வரைவு.

2.3 மழைவீழ்ச்சி, தரவு, காலநிலை, உபகரணப் பிரிவு மற்றும் வெளி அலுவலகங்களின் முன்னேற்றம்

2.3.1 தரவுப் பிரிவின் முன்னேற்றம்

- தொடர்ச்சியாகத் தரவுகளை (வெப்பநிலை வரைபுகள், யூடோமீட்டர் வரைபுகள், மழைவீழ்ச்சி வரைபுகள், அழுத்த வரைபுகள் மற்றும் சூரிய வெய்யில் வரைபுகள்) அளவிட்டு வரும் உபகரணங்களின் தரவுத் தரக் கட்டுப்பாடும் காப்பகப்படுத்தலும்
- 23 வளிமண்டலவியல் நிலையங்களில் மாதாந்த காற்றின் வேகம் மற்றும் திசைக் கணிப்பீடும் 10 வளிமண்டலவியல் நிலையங்களில் சூரிய வெய்யில் மணித்தியாலங்களைச் சோதித்தலும் காப்பகப்படுத்தலும்
- 2020 இல் வெளியகப் பிரிவினருக்கு தரவுகளை விற்பனை செய்ததன் மூலம் ரூ. 126560.00 சம்பாதிக்கப்பட்டது.

2.3.2 மழைவீழ்ச்சித் தரவுகளின் முன்னேற்றம்

- மழைவீழ்ச்சித் தரவுகளை அவதானிப்பதற்காக நாடு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ள மழை மானி நிலையங்களின் எண்ணிக்கை 555 ஆக அமைவதுடன், இவற்றில் 510 இற்கும் மேற்பட்ட நிலையங்களிலிருந்து கிரமமாக வருடம் முழுவதும் தரவுகள் பெறப்பட்டன. இந் நிலைமையானது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தன்னார்வ அவதானிப்பாளர்களுடனும் இணைந்து தொடர்ச்சியாகப் பேணப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில், 01 புதிய மழை மானி நிலையம் தாபிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில், 53 மழை மானி நிலையங்கள் கண்காணிக்கப்பட்டு அந் நிலையங்களிலுள்ள 53 தன்னார்வ ஊழியர்களுக்கு துல்லியமான அளவீடுகளை எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பில் பயிற்சி வழங்கப்பட்டது.

- மழை மானித் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த ஆண்டில் 14 புதிய மழை மானிகளும் 13 அளவிடும் குவளைகளும் வழங்கப்பட்டன.

2.3.3. காலநிலைப் பிரிவின் முன்னேற்றம்

- இந்தப் பிரிவின் பிரதான கடமைகளாவன: சூரியன் உதிக்கும் மற்றும் சூரியன் மறையும் நேரத்தை அறிவித்தல், சந்திரன் உதிக்கும் மற்றும் சந்திரன் மறையும் நேரத்தை அறிவித்தல், விளக்கு எரிக்க வேண்டிய நேரம், சமமான பகல் இரவு நாட்கள், நட்சத்திரங்களின் கட்புலத் தன்மை, தலைப்பிறை காணுதல், சந்திரனின் தேய்வு, ரம்ழான் மாதத்தின் ஆரம்பம் போன்றவற்றை அறிவித்தல் மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதல்
- இந்தப் பிரிவு போயா மற்றும் பொது விடுமுறை செயற்குழுவின் ஒரு உறுப்பினராக செயற்படுகின்றது
- வெளியகப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கியதன் மூலம் ரூ. 187324.00 சம்பாதிக்கப்பட்டது.

2.3.4. உபகரணப் பிரிவின் முன்னேற்றம்

- 2020 ஆம் ஆண்டில், 134 பாரம்பரிய உபகரணங்களும் 07 இலத்திரனியல் உபகரணங்களும் அளவுச் சீராக்கம் செய்யப்பட்டன. 182 பாரம்பரிய உபகரணங்களும் 03 இலத்திரனியல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. 113 அளவுச் சீராக்கச் சான்றிதழ்களும் தன்மை மாற்ற அட்டவணைகளும் வழங்கப்பட்டன.
- பாடசாலைகளிலும் வெளியக நிறுவனங்களிலும் 07 கல்விக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.
- 37 உபகரணங்கள் கைத்தொழில் பிரிவால் மீள் புதுப்பிக்கப்பட்டன, அத்துடன் 06 மர ஆதுரவுகளும் ஸ்டீவன்சன் மூடிகளும் மீள் புதுப்பிக்கப்பட்டதுடன் மரவேலைப் பிரிவால் 09 உற்பத்தி செய்யப்பட்டன.

2.3.5 வெளி அலுவலகங்களின் முன்னேற்றம்

- இரண்டு நபர்களுடனான குருநாகல் அலுவலகம், 02.11.2020 இல் நான்கு நபர்களுடனான அலுவலகமாக மாற்றப்பட்டது.
- 08 அலுவலகங்கள் இரண்டு நபர்களுடனும் 09 அலுவலகங்கள் நான்கு நபர்களுடனும் இயங்குகின்றன. மூன்று மேல் வளிமண்டல அவதானிப்பு அலுவலகங்கள் ஐந்து நபர்களுடனான அலுவலகங்களாக இயங்குகின்றன. 2020 ஆம் ஆண்டில், வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிலப்பரப்பு வளிமண்டலவியல் வலையமைப்பு நிலையங்கள் 58502 நிலப்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகளை மேற்கொண்டதுடன் இவற்றில் மழைவீழ்ச்சி, அழுத்தம், வெப்பநிலை, ஈரப்பதன், காற்று,

கட்புலத் தன்மை மற்றும் மேகங்களின் தன்மை மற்றும் அளவுகள் என்பனவும் உள்ளடங்கும்.

- ஐந்து அலுவலகங்கள் இந்த ஆண்டில் கண்காணிப்புச் செய்யப்பட்டதுடன், நுவரெலியா சுற்றுலா விடுதி, பதுளை உத்தியோகபூர்வ தங்குமிடம் மற்றும் நுவரெலியா அலுவலகம் ஆகியவை திருத்தம் செய்யப்பட்டன.

2.4 சவால்கள்

- இந்த 2020 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதில் கொவிட் 19 ஒரு குறிப்பிடத்தக்க தடையாக அமைந்தது.
- போதுமான தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாமை ஒரு பாரிய சவாலாகும்
- றுநுடீ புஜளு இணையத்தளத்தையும் அலைபேசிச் செயலியையும் (யீ) நிறுவக் கூடிய சேர்வர் வழங்கியைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் இவை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை.
- வளிமண்டலவியல் என்பது ஒவ்வொரு நாளும் இற்றைப்படுத்தப்படும் வளிமண்டலவியல் செயன்முறைகளையும் எதிர்வுகூறல்களையும் மையப்படுத்திய ஒரு விஞ்ஞானபூர்வக் கற்கை ஆகும் இந்த நிகழ்வுகள் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள மாறிகளுடன் தொடர்புபட்டவையாகும். அவையாவன: வெப்பநிலை, அழுத்தம், ஆவியாதல் மற்றும் பல்வேறு பரமாணங்களின் நியமங்கள் மற்றும் இடையீடு மற்றும் காலத்துடன் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவையாகும்.
- அவதானிக்கப்பட்ட பெரும்பாலான வளிமண்டலவியல் நிகழ்வுகள் வெப்பவலயத்தில் காணக் கூடியதுடன், பல நிகழ்வுகள் சடுதியாக மாறக் கூடியவையாகும். இந்த வளிமண்டலவியல் தொகுதிகளின் மீதான சரியான எதிர்வுகூறலானது இந்த வலயத்திலுள்ள நாடுகளுக்கு ஒரு பிரதான சவாலான விடயமாகும். இலங்கையும் இந்த வெப்பவலயத்திலேயே உள்ளதுடன் மத்திய அகலாங்குகளில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள் சிக்கலானதும் சவாலானதுமாகும்.
- கணினி வடிவிலானவை அதிகமாக அபிவிருத்தியடைந்த வளிமண்டலவியலைக் கொண்ட நாடுகளில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படக் கூடியதுடன் இவ் விடயங்களில் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் குவியப்படுத்தல் பெரும்பாலும் எண்ணிம வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள் மீது மையப்படுத்தப்படுகின்றது. உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அடைந்துள்ள நியமங்களை அடைவதற்கு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. மனித வளம் குறைவாக இருப்பதும் திணைக்களத்தின் முன்னுள்ள இன்னொரு சவாலாகும். வளிமண்டல அவதானிப்பு வலையமைப்பைப் பலப்படுத்துவது துல்லியமான எதிர்வுகூறல்களை வழங்குவதற்கு அத்தியாவசியமான ஒரு காரணியாகும். காலநிலை மற்றும் வானிலை எதிர்வுகூறல்கள் கடினமானதாக

மாறியுள்ள ஒரு பின்னணியில் ஆய்வுகள் ∴ ஆராய்ச்சிகளை மேற்கொள்வது கட்டாயமானதாகும்.

- மனித இனத்தின் பிரதான சவாலாக அடையாளம் காணப்பட்டிருப்பது புவி வெப்பமடைவதன் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றமாகும். காலநிலைச் செயன்முறை சிக்கலானது, ஊடாடுவது, ஒன்றுடனொன்று தொடர்பானது மற்றும் அது காற்று, நிலம், பனிக்கட்டி, பனி, சமுத்திரம் மற்றும் ஏனைய நீர்த் தொகுதிகளை உள்ளடக்கியது. இத் தொகுதிக்குத் தேவையான சக்தி சூரியக் கதிர்கள் மூலம் வழங்கப்படுகின்றது. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவால் (ஜீஊஊ) வெளியிடப்பட்ட இற்றைப்படுத்தல்களுக்கிணங்க, உயர் வெப்பநிலை, கடும் மழை காரணமான சடுதியான வெள்ளம், மண்சரிவுகள், நீண்ட வரட்சிகள் அடிக்கடி ஏற்புடுதல் போன்ற தீவிர வானிலை நிலைமைகள் கடந்த சில தசாப்தங்களில் அதிகமாக அனுபவிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் மேலும் எதிர்பார்க்கப்படுவதுடன் நீண்ட கால சமூகப் பொருளாதாரச் சேதங்களை ஏற்படுத்தக் கூடியவையாகும். காலநிலை மாற்றங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற எதிர்மறைத் தாக்கங்களுக்கு இசைவாக்கம் அடைவதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது கட்டாயமானதாகும்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் உள்ளூர் நிலையமான வளிமண்டலவியல் திணைக்களம் காலநிலை மாற்றங்களை விபரமாக மதிப்பிடுவதில், காலநிலை மாற்றங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கங்களை ஆய்வு செய்வதில், ஆய்வுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதில், மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான பிந்திய கண்டறிதல்களில் மக்களை வலுவூட்டுவதில் ஈடுபட்டுள்ளது.
- பகிரப்பட்ட சமூகப் பொருளாதாரப் பாதை (ளுஞரீ) நிலைமையின் கீழ் காலநிலை எதிர்வுகூறல் தரவுகளைப் பதிவு செய்தல் மற்றும் நுண் உணர் புலங்களில் குறித்த தரவுகளை ஆய்வு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் நிகழக் கூடிய விபத்துகளுக்கு முகம் கொடுப்பதற்கான சாத்தியத்தன்மை மதிப்பீட்டைத் தயாரித்தல், எதிர்வுகூறல் தரவுகளையும் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடைவதற்கான சாத்தியத்தன்மையையும் ஆய்வு செய்தல்.

2.5 எதிர்கால இலக்குகள்

- தரவு தொடர்பாடல் வலையமைப்பை நவீனமயப்படுத்தல்

  நாடு முழுவதும் பரந்துள்ள பிராந்திய விஞ்ஞானபூர்வ வளிமண்டலவியல் அலுவலகங்களால் அவதானிக்கப்படும் வானிலைத் தரவுகள் கொழும்பு வளிமண்டலவியல் அலுவலகத்தால் தொலைபேசி மூலமே பெற்றுக் கொள்ளப் படுகின்றது. இத் தரவுகள் பின்னர் கைகளாலேயே கணினிமயப்படுத்தப்படுகின்றன. எனவே, இதற்கு அதிக செலவும் மனித உழைப்பும் தேவைப்படுகின்றது. இத் தரவுகள் உலகம் முழுவதும் தொடர்பாடல் செய்யப்படுகின்றன. தரவுகளை வினைத்திறனாக மீட்டெடுத்தலும் பேணிப் பாதுகாத்தலும் இன்றியமையாததாகும். இதற்காக, உலக


உணவுத் திட்டத்தின் (றுகூ) ஆதரவுடன் இணையம் மூலமான ஒரு தரவு தொடர்பாடல் வலையமைப்பைத் தாபிப்பதற்காக கணினிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது 2021 ஜூலையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்தல்
  வளிமண்டலவியல் திணைக்களமானது ஊசநஆயு செயற்றிட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான நோக்கங்களாக, வளிமண்டலவியல் அவதானிப்பு வலையமைப்பை மேம்படுத்தல், பொருத்தமான மனித வளத்தை மேம்படுத்தல் மற்றும் எதிர்வுகூறலை விருத்தி செய்தல் போன்றவையாகும். இது தொடர்பான ஆரம்பப் படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- புத்தளத்திலும் பொத்துவிலிலும் ரேடார் தொகுதிகளைப் பொருத்துதல்
  துஐஊயு நிறுவனம் ஜப்பானிய உதவியுடன் இரண்டு டொப்ளர் ரேடார் தொகுதிகளைத் திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது பலத்த மழைவீழ்ச்சி மற்றும் கடும் காற்று தொடர்பாக உயர் துல்லியத் தன்மையான எச்சரிக்கைகளை வழங்கும்.
- காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறிகள் காலநிலை நுண் உணர்திறன் கொண்ட பிரிவுகளான விவசாயம், அனர்த்த முகாமைத்துவம், வலு மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள நடவடிக்கைகளில் அதிக அழுத்தத்தைக் கொண்டிருக்கும். காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறுபாடுகளிலிருந்தான தாக்கங்களைத் தணிப்பதை மையப்படுத்திய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சேவைகளை நவீனமயப்படுத்துவதன் மூலம் காலநிலை நுண் உணர்திறன் கொண்ட பிரிவுகளில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை உருவாக்குவதற்கு காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறுபாடுகளின் காரணமாக ஏற்படும் சவால்களை வெற்றி கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

பணிப்பாளர் நாயகம்
வளிமண்டலவியல் திணைக்களம்

பிரிவு 03 –2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாடுகள்

3.1 *நிதி செயல்திறன் அறிக்கை*



ஏசீஏ- எப்

2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2020		உண்மை நிலை 2020	2019
	வருமானப் பெறுகைகள்		
	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	-	-
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)	-	-
	வருமானம் பெறுகைகள்		
	திறைசேரி பணிமுற்பணங்கள்	307,508,525.00	296,037,876.92
	வைப்புகள்	841,911.62	330,946,664.82
	முற்பணக் கணக்குகள்	9,956,153.10	10,347,551.88
	ஏனைய பெறுகைகள்	20,703,444.29	30,339,005.42
	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)	**339,010,034.01**	**667,671,099.04**
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)	**339,010,034.01**	**667,671,099.04**
	கழி : செலவினம்		
	மீண்டுவரும் செலவினம்		
254,132,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	247,734,165.21	240,827,685.80
58,135,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	49,371,278.63	49,709,440.71
12,163,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	11,847,408.78	9,398,804.94
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	-	9,650.00
324,430,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**	**308,952,852.62**	**299,945,581.45**
	மூலதனம் செலவினம்		
9,649,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	8,628,459.79	988,521.16
27,861,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	21,203,481.94	14,795,277.41
1,372,000	மனித வள அபிவிருத்தி	627,192.40	6,715,652.06
2,278,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	325,553.20	9,325,262.40
41,160,000	**மொத்த மூலதனம் செலவினம் (உ)**	**30,784,687.33**	**31,824,713.03**
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)	**8,646,671.37**	**347,337,300.12**
	வைப்புக் கொடுப்பனவுகள்	4,699,382.37	335,744,120.12
	முற்பணக் கொடுப்பனவுகள்	3,947,289.00	11,593,180.00
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)	**348,384,211.32**	**679,107,594.60**
365,590,000	**2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)**	**(9,374,177.31)**	**(11,436,495.56)**

79

3.2 நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	உண்மை நிலை	
	2020	2019
	ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது		
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	3,872,356,533.65	3,854,219,110.82
நிதி சொத்துக்கள்		
முற்பணக் கணக்குகள்	23,718,117.51	29,726,981.61
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	45.11	19,306.44
மொத்த சொத்துக்கள்	**3,896,074,696.27**	**3,883,965,398.87**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு		
தேறிய பெறுமதி	22,437,010.68	24,588,404.03
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்	3,872,356,533.65	3,854,219,110.82
நடைமுறைப் பொறுப்புக்கள்		
வைப்பக் கணக்குகள்	1,281,106.83	5,138,577.58
பணிமுற்பண மீதி	45.11	19,306.44
மொத்தப் பொறுப்புக்கள்	**3,896,074,696.27**	**3,883,965,398.87**

பக்க இலக்கம் 82 முதல் 107 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 108 முதல் 118 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஜெனரல் கமால் குணரட்ன (ஓய்வுபெற்ற)
ஆர்எஸ்பீ யுஎஸ்பீ எனடீசீ பீஎஸ்சீ
பதவி : செயலாளர்
தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்
அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
திகதி : 2021.02

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: A.K.கருணாநாயக்க
பதவி : பணிப்பாளர் நாயகம்
திகதி : 2021.02.12

.....
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : டீ.ஏ.எம்.எல். தென்னக்கோன்
திகதி : 2021.02. 12

A.K. Karunanayake
Director General
Department of Meteorology
383, Bauddhaloka Mawatha,
Colombo 07.

Amila Tennakoon
Accountant
Department of Meteorology
Bauddhaloka Mawatha
Colombo 07

General Kamal Gunaratne (Retd)
WWV RWP RSP USP ndc psc MPhil
Secretary
State Ministry of National Security,
Home Affairs and Disaster Management

80

3.3 பணப்பாய்வு அறிக்கை

ஏசீஏ- சீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	உண்மை	
	2020 ரூபா	2019 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வருமானம் அல்லாத பெறுகைகள்	20,703,444.29	30,339,005.42
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	307,508,525.00	296,037,876.92
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**328,211,969.29**	**326,376,882.34**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	298,646,243.72	296,697,660.73
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	11,847,408.78	9,398,804.94
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,544,095.00	454,767.00
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**312,037,747.50**	**306,551,232.67**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**16,174,221.79**	**19,825,649.67**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
முற்பணங்களிலிருநது அறவிடப்பட்டவை	9,956,153.10	10,802,318.88
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**9,956,153.10**	**10,802,318.88**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	18,171,926.03	14,387,500.81
முற்பணக் கொடுப்பனவுகள்	4,100,933.00	11,423,706.00
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**22,272,859.03**	**25,811,206.81**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(12,316,705.93)**	**(15,008,887.93)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**3,857,515.86**	**4,816,761.74**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	841,911.62	330,946,664.82
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**841,911.62**	**330,946,664.82**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
வைப்புகளின் கொடுப்பனவு	4,699,382.37	335,744,120.12
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**4,699,382.37**	**335,744,120.12**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**(3,857,470.75)**	**(4,797,455.30)**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	**45.11**	**19,306.44**
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**45.11**	**19,306.44**

81

3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புபள்

3.5 வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள்

				ரூ. “000	
வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		மொத்த மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமானம் மதிப்பீட்டின் சதவீதமாக மூ.
பொருத்தம் இல்லை					

3.6 ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளைப் பயன்படுத்திய செயற்பாடுகள்

				சுள. “000
கொடுப்பனவு வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், இறுதி ஒதுக்கீடுகளில் சதவீதமாக மூ.
	நிதி ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
மீள்வரும்	324430.00	324430.00	308952.85	95
மூலதனம்	41160.00	41160.00	30784.69	75

3.7 குசு 208 (நி.ஒ 208) இற்கிணங்க, வேறு ஒரு அமைச்சு ∴ திணைக்களத்தின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களம் ∴ பிரதேச செயலகம் ∴ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

						சுள. “000
தொடர் இல.	ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்ட அமைச்சு திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், ஒதுக்கீடுகளில் சதவீதமாக மூ.
			ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
பொருத்தம் இல்லை						

3.8 நிதி அல்லாத சொத்துகளை அறிக்கையிடுவதில் செயற்பாடுகள்

					ரூள. “000
சொத்து குறியீடு	குறியீட்டின் விபரம்	மதிப்பாய்வு சபைக்கு இணங்க, 31.12.2020 இல் மீதி	நிதி நிலைமை அறிக்கைக்கு இணங்க, 31.12.2020 இல் மீதி	எதிர்கால கணக்கீட்டுக்காக	அறிக்கை முன்னேற்றம் சதவீதமாக மூ.
9151	கட்டடங்களும் கட்டமைப்புகளும்	278325.00	278325.00	-	-
9152	இயந்திரங்கள்	313994.30	313994.30	-	-
9153	நிலம்	3280037.23	3280037.23	-	-
9154	புலப்படாச் சொத்துகள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துகள்	-	-	-	-
9160	செயற்படு நிலை	-	-	-	-
9180	குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துகள்	-	-	-	-

1.9 ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவணடந்த ஆண்டிற்கான நிதிநிணல அறிக்ணக குறித்த கைக்காய்வாளர் நாயகத்தின் அறிக்ணக, இந்த அறிக்ணகயின் இறுதியில் இணைப்பாக (இணைப்பு 01) இணைக்கப்பட்டுள்ளத

பிரிவு 04 – செயற்பாட்டு குறிகாட்டிகள்

4.1 – நிறுவனத்தின் செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க)

விசேட குறிகாட்டிகள்	உண்மையான வெளியீடுகள் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக மூ		
	100%- 90%	75%-89%	50%-74%
1. அனர்த்த இடர்களைக் குறைப்பதற்காக சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கைகளை வழங்குதல்	90%		
2. அவதானிப்பு வலையமைப்புகளை மேம்படுத்தல்	95%		
3. பொதுமக்களுக்கான வளிமண்டலவியல்.. காலநிலையியல் சேவைகளை மேம்படுத்தல்	95%		
4. எதிர்வுகூறல்களின் துல்லியத்தன்மையை மேம்படுத்தல்	95%		

பிரிவு 05 - செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க)

5.1 பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணல்

இலக்கு	இலக்கு	அடைவுக்கான குறிகாட்டி	இலக்குகளை அடைவதில் முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
13. காலநிலை மற்றும் அதன் தாக்கங்களை எதிர்க்கக்கூடிய அவசர நடவடிக்கைகளை எடுத்தல்	13.1 காலநிலை மற்றும் இயற்கை தொடர்பான அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காக நாட்டின் அனர்த்த மீளெழுச்சி மற்றும் இயலளவை வலுவூட்டல்	13.1.1 இயற்கை அனர்த்தங்களால் நேரடியாகப் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை மற்றும் இறந்த மக்களின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகையின் ஒரு லட்சம் மக்களிலிருந்து காணாமல் போன மக்களின் எண்ணிக்கை	20%		
		13.1.2 2015 – 2030 வரை ளுநுனுளுயுஜ வரம்புருவுக்கு இணங்க, அனர்த்த இடர்களைக் குறைப்பதற்காக தேசிய இடர் குறைப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்திய நாடுகளின் எண்ணிக்கை			
		13.1.3 தேசிய அனர்த்த இடர் குறைப்பு முறைமைகளுக்குச் சமாந்தரமாக அனர்த்த இடர் குறைப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்திய உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை			

	13.2 தேசிய மட்டக் கொள்கைகள், முறைமைகள் மற்றும் திட்டங்களில் வளிமண்டலவியல் மாற்றக் குறைப்பை உள்ளடக்குதல்	13.2.1 உணவு உற்பத்திக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் காலநிலை மாற்றத்தின் மோசமான தாக்கங்களுக்கு இசைவாக்கம் அடைவதற்கான இயலளவுகளை வளர்த்துக் கொள்ளக் கூடிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட, திடமான கொள்கைகள் ∴முறைமைகள் ∴திட்டங்களைத் தாபித்த மற்றும் நடைமுறைப்படுத்திய நாடுகளின் எண்ணிக்கை மற்றும் காலநிலை மாற்றங்களையும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தையும் குறைக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு	20%		
	13.3 வளிமண்டலவியல் மாற்றங்களைக் குறைத்தல், தழுவிக் கொள்ளல் மற்றும் விபத்துக்களுக்கு முன்னரான கல்வி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மனித மற்றும் நிறுவன இயலளவுகளை அதிகரித்தல்	13.3.1 தணித்தல், தழுவிக் கொள்ளல், தாக்கக் குறைப்பு மற்றும் முன்னெச்சரிக்கைகள் போன்ற விடயங்களை ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்விப் பாடத்திட்டங்களில் உள்ளடக்கிய நாடுகளின் எண்ணிக்கை	20%		
		13.3.2 தொழில்நுட்பப் பரிமாற்றம், தழுவிக் கொள்ளல் மற்றும் தணித்தலுக்குத் தேவையான இயலளவுகளை அதிகரித்தல் மற்றும் மக்களையும் நிறுவனங்களையும் வலுவூட்டல்			

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடைவுகளும் சவால்களும்

5.2.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பொதுவாக வளிமண்டலவியலுக்குப் பொருத்தமானவையாக அமைவதுடன், 17 இலக்குகளில் 11 இலக்குகள் (இலக்கு 1இ2இ3இ5இ6இ7இ9இ11இ13இ14இ15இ17) வளிமண்டலவியல் சேவைகளுக்கு முக்கியமானவையாகும். ஆனால், முழுமையாகவும் ஒரு இலக்காகக் கருதுமிடத்து இவை 12 இலக்குகள் ஆகின்றன. காலநிலை மற்றும் அதன் தாக்கங்களை எதிர்ப்பதற்கான வளிமண்டலவியலின் பொறுப்பானது மிகவும் முக்கியமானதாகும். இந்த இலக்குகளை அடைவதற்கான வளிமண்டலவியலின் பங்களிப்பை வகைப்படுத்துகையில் அது வளி மாசடைதல், காலநிலைத் தகவல், காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை எதிர்வுகூறல் என வகைப்படுத்தலாம்.

இலக்கு 1 – வறுமையை ஒழித்தல்

அனர்த்தத் தணிப்பு, ஆய்வுகளைத் தொடர்தல், வறுமையை ஒழிப்பதில் பங்களிப்புச் செய்யக் கூடிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகவல்களையும் சேவைகளையும் வழங்குதல். அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவை என அடையாளம் காணப்படாவிட்டாலும் வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியலுடன் தொடர்பான ஏனைய பொருட்களும் சேவைகளும் பெரும்பாலான நேரங்களில் அத்தியாவசியமானதும் அளவிடப்படக் கூடியதுமான சமூக பொருளாதார நன்மைகளை வழங்குகின்றன.

இலக்கு 2 – பசி இன்மை: உணவுப் பாதுகாப்பு, போஷாக்கை அதிகரித்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்தல்

விவசாயிகளும் மீனவர்களும் இடர் குறைப்பு, பயிர் தகவமைப்பு, நாளாந்த மற்றும் பருவகால விவசாய முகாமைத்துவத்திற்கான வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளில் பிரத்தியேகமாகத் தங்கியுள்ளனர். விவசாயத் துறையை இலக்கு வைத்த சேவைகள் ஊடாக உணவுப் பாதுகாப்பு என்பதை மிக முக்கியமான ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. உதாரணமாக, காலநிலையியல், வளிமண்டலவியல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றிலான அதிகரித்து வரும் கருத்தரங்குகள் வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய செயற்பாட்டுத் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குகின்றன.

இலக்கு 3 – அனைத்து வயதினருக்குமான சிறந்த ஆரோக்கியமும் நல்வாழ்வும்

வெள்ளம், வரட்சி, வெப்பம், சூறாவளிகள் மற்றும் வளி மாசடைதல் போன்றவற்றால் உயிர்கள் இழக்கப்பட்டு சொத்துகளுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன. தேசிய வளிமண்டலவியல் சேவைகள் மூலம் ஏனைய சேவை வழங்குநர்களுக்கும் சுகாதார நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்படுகின்ற எதிர்வுகூறல்களும் ஆலோசனைகளும் இந்த உயிர்களைக் காப்பதில் உதவி புரிகின்றன. நுளம்புகள், உண்ணிகள் மற்றும் ஏனைய பூச்சிகளின் இருத்தலும் பெருக்கமும் வளிமண்டலவியல், காலநிலையியல் மற்றும் நீர்க் காரணிகளில் தங்கியுள்ளது.

இலக்கு 5 – பால்நிலைச் சமத்துவமும் பெண்களை வலுவூட்டலும்

பால்நிலைச் சமத்துவத்தை அடைவதற்கும் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பதவி உயர்வுகள் வழங்கப்படும் போதும் பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யும் போதும் ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்படுகின்றனர். அனர்த்த இடர் குறைப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தியில் அவர்களின் ஆற்றல்கள், பலங்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலக்கு 6 – சுத்தமான நீரும் சுகாதாரமும்

பருவகால மற்றும் மாதாந்த எதிர்வுகூறல்கள் போன்ற நீண்ட கால முன்னறிவிப்புகளும் தரவு ஆய்வுகளை வழங்குவதும் சுத்தமான குடிநீரை அடைவதை உறுதிப்படுத்துகின்றன. தேசிய வளிமண்டலவியல் தகவல் வலையமைப்பால் வழங்கப்படும் மழைவீழ்ச்சித் தரவுகள் உள்ளிட்ட அவதானிப்புகளும் ஆய்வுகளும் நிலைபேறான நீர் முகாமைத்துவத்திற்கு இன்றியமையாததாகும்.

இலக்கு 7 – மலிவான, நிலைபேறான, நம்பகமான மற்றும் சுத்தமான வலுவை அடைதல்

சுத்தமான சக்தி மூலங்களானது மழைவீழ்ச்சி, சூரிய ஒளி, காற்றுத் தரவுகள் மற்றும் எதிர்வுகூறல்கள் ஊடாக சந்தைப் பங்கை அபிவிருத்தி செய்வதில் வசதிப்படுத்துகின்றன. வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் எதிர்வுகூறல்கள் நீர் உட்கட்டமைப்பு வசதிகளையும் வலு உட்கட்டமைப்பு வசதிகளையும் பாதுகாப்பதில் உதவி புரிகின்றன.

இலக்கு 9 – மீளெழும் உட்கட்டமைப்பு வசதிகளும் அனைத்தையும் உள்ளடக்கிய கைத்தொழிற்றுறைப் புத்தாக்கமும் உட்கட்டமைப்பும் மற்றும் நவீனத்துவம் ஊடாக போஷித்தலும்

மோசமான வானிலை நிலைமைகள் அனர்த்தத்துக்கு ஏதுவான உட்கட்டமைப்புகளை சேதமாக்கலாம் அல்லது அழிக்கலாம், அத்துடன் இது பொருளாதார மற்றும் மனித இழப்புகளை ஏற்படுத்தலாம். தேசிய வளிமண்டலவியல் அறிக்கைகள் உட்கட்டமைப்பு வசதிகளையும் கைத்தொழிற்றுறையையும் பாதுகாப்பதோடு, கரையோரப் பிரதேசங்கள் மற்றும் காலநிலை மாற்றத்துக்கு உள்ளாகும் பிரதேசங்கள் போன்ற அனர்த்தத்துக்கு ஏதுவான பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளைத் தாபிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றன.

இலக்கு 11 – நகரங்கள் மற்றும் மனிதக் குடியிருப்புகளை உள்ளடக்கிய நிலைபேறான நகரங்களும் சமூகங்களும்

